**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
2021 மே 21

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும்

## சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

இது இல.35/03/016/007/001 கொண்ட சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானது. இது திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்கள் மீது 2016 ஒத்தோபர் 31ஆம் நாள் வரை விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்/ சுற்றறிக்கைகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டியதன் மூலம் பங்கேற்கும் நிறுவனங்கள் அனைத்து அறிவுறுத்தல்களையும் ஒன்றாக வைத்திருப்பதற்காக 2016 நவெம்பர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விடுக்கப்பட்டது.

சந்தைத் தொழிற்பாடுகள் மீதான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியினால் இப்பொழுது வரை திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்கள் மீது விடுக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைத் திரட்டியதன் மூலம் திருத்தியமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, பங்கேற்கும் அனைத்து நிறுவனங்களும் 2021 யூன் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இற்றைப்படுத்தப்பட்ட சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு (2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை) இணங்கியொழுகுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

சி. ஏ. அபேசிங்க

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

இணைப்பு I

2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை

# சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

1.0 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்களின் மீது 2016 ஒத்தோபர் 31ஆம் நாள் வரை பங்கேற்கும் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட அனைத்துத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் கூட்டிணைக்கின்ற விதத்தில் 2016 நவெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி "சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்" இனை விடுத்திருக்கிறது.

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் நீங்கலாக முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட கம்பனிகள்) மற்றும் ஊழியர் சேம நிதியம் என்பன பங்கேற்கும் நிறுவனங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

2.0 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்கள் மீது 2021 மே 20ஆம் நாள் வரை இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட (கிளை வாசகம் 3.0இல் தரப்பட்டுள்ளவாறு) பின்வரும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்/ சுற்றறிக்கைகளைத் திரட்டியதன் மூலம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தற்பொழுது திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கைகள் புறக்கீடு செய்யப்பட்டு புதிய சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2021 யூன் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

3.0 திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்/ சுற்றறிக்கைகளின் பட்டியல்

| | சுற்றறிக்கை இல. | விடுக்கப்பட்ட திகதி | தலைப்பு |
|---|---|---|---|
| 01 | 35/03/016/007/001 | 2016 நவெம்பர் 01 | சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் |
| 02 | 35/03/021/0013/001 | 2018 ஓகத்து 23 | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் |
| 03 | 35/03/016/007/002 | 2019 பெப்புருவரி 14 | சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் |
| 04 | 35/03/016/007/003 | 2019 செத்தெம்பர் 05 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான திருத்தப்பட்ட நேர அட்டவணை |
| 05 | 35/03/016/007/004 | 2019 செத்தெம்பர் 05 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் உடனடி ஏலங்கள் |
| 06 | 35//03/021/0013/002 | 2019 செத்தெம்பர் 05 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் தனியான முதனிலை வணிகர்களுக்காக திரவத்தன்மை ஆதரவு வசதி தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் |
| 07 | 35/03/021/0013/003 | 2019 செத்தெம்பர் 05 | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் |
| 08 | 35/03/016/007/005 | 2020 பெப்புருவரி 11 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் உடனடி ஏலங்கள் |
| 09 | 35/03/016/007/006 | 2020 யூன் 29 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் துணைநில் வசதிகளுக்காக தற்போதுள்ள முறைமைகளுக்கு நவீன திருத்தங்களை அறிமுகப்படுத்தல் |

## பகுதி 1: அறிமுகம்

4.0 இலங்கை மத்திய வங்கி, துணைநில் வீத வீச்சான வட்டி வீத வீச்சொன்றிற்குள் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினைப் பேணும் பொருட்டு, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துகின்றது. எனினும், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், தனியான முதனிலை வணிகர்களுக்கு நேர்மாற்று மீள்கொள்வனவு வடிவத்தில் திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் வழங்கப்படுமிடத்து மாத்திரமே உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்படுகின்றன. துணைநில் வீத வீச்சின் முறையே கீழ் எல்லையினையும் மேல் எல்லையினையும் உருவாக்குகின்ற துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பனவற்றின் நியதிகளில் துணைநில் வீத வீச்சு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. துணைநில் வீத வீச்சு ஒவ்வொரு ஆண்டும் எட்டுத் தடவைகள் மீளாய்வு செய்யப்பட்டு தேவையானவிடத்து திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.0 நாளாந்த மற்றும் குறுங்கால பணச் சந்தைத் திரவத்தன்மையின் மதிப்பீடு, சந்தை அபிவிருத்தி மற்றும் கொள்கை சூழல் என்பனவற்றின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு ஒன்றில் சந்தையிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ள வேண்டுமா அல்லது சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்ய வேண்டுமா என்பது பற்றியும் அவ்வாறாயின் தொகை, வகை மற்றும் சாதனங்களின் காலம் பற்றியும் தீர்மானித்தல் வேண்டும்.

6.0 அ. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், பங்கேற்கும் நிறுவனங்கள் பின்வரும் சாதனங்களை ஒவ்வொரு பிரிவிலும் குறித்துரைக்கப்பட்டவாறு பெற்றுக்கொள்ள முடியும்.

அ. குறுங்கால ஏலங்கள்

அ. குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள்

ஆ. குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

ஆ. நீண்ட கால ஏலங்கள்

அ. நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள்

ஆ. நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

இ. திரவத்தன்மை ஆதரவு வசதி

அ. குறுங்கால திரவத்தன்மை ஆதரவு வசதி

ஆ. நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி

ஈ. உடனடி ஏலங்கள்

அ. உடனடி விற்பனை ஏலங்கள்

ஆ. உடனடி கொள்வனவு ஏலங்கள்

உ. மத்திய வங்கி பிணையங்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள்

அ. ஏல முறைமைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்

ஆ. ஏல முறைமைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் இளைப்பாறல்

இ. இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை மீண்டும் வாங்கிக் கொள்ளும் வசதி

ஊ. வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள்

அ. வாங்கும் - விற்கும் பரஸ்பர பரிமாற்றல்கள்

ஆ. விற்கும் - வாங்கும் பரஸ்பர பரிமாற்றல்கள்

ஆ. துணைநில் வசதியின் கீழ், பங்கேற்கும் நிறுவனங்கள் பின்வரும் சாதனங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியனவாக இருக்கும்.

அ. துணைநில் வைப்பு வசதி

ஆ. துணைநில் கடன்வழங்கல் வசதி

### பகுதி 2: பங்கேற்கும் நிறுவனங்களுக்கான பொதுவான அறிவுறுத்தல்கள்

7.0 இலங்கை மத்திய வங்கி சந்தைத் தொழிற்பாடுகள் குழுவின் தீர்மானத்தினை கணனிவழி அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு ஊடாக சந்தைக்கு அறிவிக்கும். துணைநில் வசதி தவிர்ந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு ஏல முறைமை பயன்படுத்தப்படுதல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனங்கள், கீழேயுள்ள கிளை வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலை தவிர, கணனி வழி அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மூலம் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொடர்பான முறைமைகளினூடாக தமது வணிகங்களை/ விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.0 தொழில்நுட்பத் தவறுகள் காரணமாக மாத்திரம் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையைப் பங்கேற்கும் நிறுவனங்கள் அணுக முடியாத சந்தர்ப்பத்தில், அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் தொடர்பான வணிகங்களை/ விலைக்குறிப்பீடுகளைத் தொலைபேசியூடாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்குத் தொடர்பான ஏலங்கள் மூடப்படுவதற்கு முன்னதாக அல்லது துணைநில் வசதியின் வெட்டு நேரத்திற்கு முன்னதாக எது ஏற்புடைத்தானதோ அதன் அடிப்படையில் சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. இரண்டு அதிகாரம் பெற்ற அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்ட அத்தகைய வணிகம்/ விலைக்குறிப்பீடுகளை உறுதிப்படுத்துகின்ற கடிதமொன்றினை, அத்தகைய தொழில்நுட்பத் தவறின் தன்மையினை எடுத்துக்காட்டும் விதத்தில், பொருத்தமானவாறு, தொடர்பான ஏலம் அல்லது வெட்டு நேரம் முடிவடைந்த பின்னர் 15 நிமிடங்களுக்குள் தொலைநகல் ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய வணிகம்/ விலைக்குறிப்பீடு ஒவ்வொன்றும் கொடுக்கல்வாங்கல்களை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் கையால் பதிவுசெய்வதனை இயலுமைப்படுத்தும் விதத்தில் தொடர்பான தகவல்கள் அனைத்தையுமுள்ளடக்கியிருத்தல் வேண்டும். அவர்களால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பங்கேற்கும் நிறுவனங்கள் சார்பில் கையினால் வணிகங்களை மேற்கொள்ள/ விலைக்குறிப்பீடுகளை மேற்கொள்வதற்கான கோரிக்கையொன்றாக அத்தகைய தொடர்பூட்டலை இலங்கை மத்திய வங்கி பரிசீலனையில் கொள்ளும். கையால் விலைக்கோரல்களைப் பதிவுசெய்வதற்கான தகவல்கள் பிழையாக அல்லது பூரணமாக நிறைவுசெய்யப்படாதவிடத்து

அத்தகைய கோரிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் நிராகரிக்கப்படுவதற்குக் காரணமாகலாம். குறித்துரைக்கப்பட்ட வெட்டு நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் விலைக்குறிப்பீடுகள் (தொலைபேசி அத்துடன்/ அல்லது தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம்) எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தொலைநகலின் மூலப்பிரதி அதேநாளன்று வியாபாரம் மூடப்படுவதற்கு முன்னதாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

9.0 இவ்வொன்று திரட்டப்பட்ட சுற்றறிக்கையின் 4, 5 மற்றும் 6ஆம் பிரிவுகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஏற்பாட்டு நியதிகளில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கிகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலக் கொடுக்கல்வாங்கல்களும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாக இருக்கும். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்பதங்கள் முதன்மை மீள்கொள்வனவுகள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையில் அவற்றிற்கு வழங்கப்பட்ட அதே கருத்துக்களையே கொண்டிருத்தல் வேண்டும்.

10.0 இவ்வொன்று திரட்டிய சுற்றறிக்கையின் 3ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் நியதிகளில், பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையே மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து துணைநில் வைப்பு வசதிகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகளின் கொடுக்கல்வாங்கல்களும் அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட முதன்மை துணைநில் வசதி உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குட்பட்டனவாக இருக்கும். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்பதங்கள் முதன்மை துணைநில் வசதி உடன்படிக்கையில் அவற்றிற்கு வழங்கப்பட்ட அதே கருத்துக்களையே கொண்டிருக்கும்.

11.0 பங்கேற்கும் நிறுவனங்களுக்கான முன்னறிவித்தலுடன் இவ்வொன்று திரட்டப்பட்டுள்ள சுற்றறிக்கையினைத் திருத்துவதற்கு, மாற்றியமைப்பதற்கு அல்லது வேறு ஏதேனும் நியதிகள் அத்துடன்/ அல்லது நிபந்தனைகளை அல்லது அதிலுள்ள ஏதேனும் பகுதியினை மாற்றுவதற்கான உரிமையினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

12.0 திரட்டப்பட்ட சுற்றறிக்கைக்கும் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக்கும் அத்துடன்/ அல்லது முதன்மை துணைநில் வசதி உடன்படிக்கைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு காணப்படும் சந்தர்ப்பத்தில் இத்திரட்டப்பட்ட சுற்றறிக்கையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

13.0 அனைத்து ரூபா கொடுக்கல்வாங்கல்களுக்குமான வணிக/ விலைக்குறிப்பீட்டின் குறைந்தபட்சப் பெறுமதி ரூபா ஒரு மில்லியனாக (ரூ.1,000,000.00) இருக்குமென்பதுடன் வணிகம் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கத்தில் இருத்தலும் வேண்டும்.

14.0 அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினை அணுகுவதில் தொழில்நுட்பத் தவறு ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டும் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிப்படுத்தல்களைப் பங்கேற்கும் நிறுவனமொன்று பார்க்கவோ அல்லது அச்செடுக்கவோ முடியாதிருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கோரிக்கையின் மீது உறுதிப்படுத்தல்களின் பிரதியொன்றினை தொலைநகலில் பங்கேற்கும் நிறுவனத்திற்கு அனுப்பும்.

15.0 ஏலத்தில், துணைநில் கடன்வழங்கல் வசதி வீத வணிகம் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீட்டினை மேற்கொள்ளும் பொழுது துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகம்/ நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீடு போன்ற ஒவ்வொன்றிற்குமாக இலங்கை மத்திய வங்கிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பிணைகள்/ பிணையங்களின் முகப்புப் பெறுமதி, தொடர்பான பிணை/ பிணையங்களின் இலங்கை மத்திய வங்கியினது அலுவல்சார் வாங்கும் விலை/ விலைகளின் அடிப்படையில் தன்னியக்கமான முறையில் முறைமையினால் கணிக்கப்படும். அத்தகைய அலுவல்சார் விலைகள் லங்கா செகுயரில் பதிவுசெய்யப்படுவதுடன் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையிலிருந்தும் சீர்ப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

16.0 குறிப்பிட்ட துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகம் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீட்டிற்காக பங்கேற்கும் நிறுவனங்கள் பன்னாட்டு பிணை அடையாள இலக்கங்களில் ஏதேனும் இலக்கமொன்றினை (பன்னாட்டு பிணை அடையாள இலக்கம் பெருக்கி) ஒதுக்க முடியும். துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகம் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீடு ஒரு இலக்கத்திற்கும் கூடுதலான பன்னாட்டு பிணை அடையாள இலக்கத்துடன் தொடர்பானதாக இருக்குமாயின் அத்தகைய ஒவ்வொரு பன்னாட்டு பிணை அடையாள இலக்கமும் தனியான வணிகம்/ விலைக்குறிப்பீடாகக் கருதப்படல் வேண்டும்.

17.0 சேதங்களின் மீட்பு

அ. தீர்ப்பனவுத் திகதியன்று விலைக்குறிப்பீட்டினை/ வணிகத்தினை பங்கேற்கும் நிறுவனங்கள் கௌரவிக்கத் தவறுதல்

பங்கேற்கும் நிறுவனமொன்றின் வணிகம்/ விலைக்குறிப்பீட்டினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வது சட்டத்தினால் பிணிக்கப்பட்டிருப்பதுடன் தீர்ப்பனவுத் திகதியானது லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியம் இல்லாமை அல்லது அவர்களது சொந்தக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் பிணைகள்

போதுமானளவு கிடைக்காமல் இருப்பதன் காரணமாக பங்கேற்கும் நிறுவனம் வணிகத்தினை/ விலைக்குறிப்பீட்டினை கௌரவிக்கத் தவறுமாயின், அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் வட்டிக்குச் சமமான தொகையொன்றினை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும். அத்தகைய சேதங்கள் இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களில் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அடுத்த வியாபார நாளன்று கழிக்கப்படுதல் வேண்டும்.

ஆ. முதிர்ச்சித் திகதியன்று செலுத்தத் தவறும் பங்கேற்கும் நிறுவனம்

முதிர்ச்சித் திகதியன்று (மீண்டும் விற்கும் திகதி) லங்காசெகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக மீண்டும் விற்கும் பெறுமதியினைச் செலுத்துவதற்கு பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினைப் பேணுவதற்கு அந்நிறுவனம் தவறும் சந்தர்ப்பத்தில் பங்கேற்கும் நிறுவனம் நாளொன்றிற்கு ஒரு சதவீதத்தின் பத்திலொரு (0.1 சதவீதம்) சதவீதத்தில் செலுத்தத் தவறிய வட்டி வீதக் கொடுப்பனவிற்குப் புறம்பாக மீண்டும் விற்கும் பெறுமதிக்குச் சமமான பெறுமதியினை இலங்கை மத்திய வங்கிக்குச் சேதமாக செலுத்த பொறுப்புடையதாகும்.

இ. மேற்குறிப்பிட்ட (ஆ) இலிருந்து பெறப்பட்ட மொத்தத் தொகை இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களில் தீர்ப்பனவுக் கணக்குகளில் அடுத்துவரும் வியாபார நாளன்று பற்று வைக்கப்படும்.

ஈ. கலண்டர் ஆண்டொன்றில் ஒரு தடவைக்கும் மேலாக விலைக்குறிப்பீடு/ வணிகத்தினைக் கௌரவிப்பதற்குத் தவறுதல்

கலண்டர் ஆண்டொன்றில் ஒரு தடவைக்கும் மேலாக விலைக்குறிப்பீடு/ வணிகத்தினைக் கௌரவிப்பதற்கு பங்கேற்கும் நிறுவனமொன்று தவறும் சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியதொரு காலப்பகுதி வரை அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்தும் இடைநிறுத்தப்படுவதனை இலங்கை மத்திய வங்கி பரிசீலனையில் கொள்ளலாம். பங்கேற்கும் நிறுவனமொன்று கலண்டர் ஆண்டொன்றில் மூன்று தடவைக்கும் மேலாக செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் அத்தகைய செலுத்தத் தவறும் வட்டி வீதம் நாளொன்றிற்கு ஒரு சதவீதத்தில் பத்திலிரண்டு சதவீதத்திற்கு அதிகரிக்கப்படல் வேண்டும் அல்லது பங்கேற்கும் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய காலப்பகுதி வரை கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட முடியாது.

18.0 ஏலம் மூடப்பட்டதும் எந்தவொரு சூழ்நிலையிலும் பங்கேற்கும் நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட விலைக்குறிப்பீடுகளில் எந்தவொரு திருத்தத்தினையும் செய்யமுடியாது.

19.0 கிரமமான ஏலங்களுக்குப் புறம்பாக, இலங்கை மத்திய வங்கி அவசியமானது எனக் கருதும் பொழுது வைத்திருக்கும் மேலதிக ஏலங்களை நடத்துவதற்குத் தீர்மானிக்கலாம்.

20.0 பங்கேற்கும் நிறுவனத்தின் வணிகத்தினை/ விலைக்குறிப்பீட்டினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

21.0 திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் அலுவல்சார் வாங்குகின்ற மற்றும் விற்கின்ற விலைகள் நடைமுறைச் சந்தை விலைகள் மற்றும் அபிவிருத்திகளின் அடிப்படையில், நாளாந்த ரீதியில் இலங்கை மத்திய வங்கியினால் கணிக்கப்படுதல் வேண்டும்.

22.0 அரசாங்கம் சடுதியாக வங்கி விடுமுறையொன்றினை பிரகடனப்படுத்துமிடத்து, ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான முதிர்ச்சிநாள் அத்தகைய விடுமுறை நாளன்று வருமிடத்து, அத்தகைய நாளன்று எழும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு தரப்பினர் கடப்பாடுகளைக் கொண்டிருப்பின் உடனடுத்து அடுத்துவரும் வியாபார நாளன்று அதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

23.0 திறந்த சந்தைத் தொழிற்பாட்டுச் சாதனங்களின் நேர அட்டவணையுடன் சேர்ந்து சுருக்கமொன்று இணைப்பில் தரப்பட்டுள்ளது.

24.0 துணைநில் வைப்பு வசதி நீங்கலாக அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் இருக்கும்.

25.0 ஏலமொன்று நடைபெறும் சந்தர்ப்பத்திலும் வெட்டு வட்டி வீதத்தில் விலைக்குறிப்பீடுகள் காணப்படும் சந்தர்ப்பத்திலும் முன்வைக்கப்பட்ட தொகையை விஞ்சிக் காணப்படும் கிடைக்கத்தக்க அளவு அத்தகைய விலைக்குறிப்பீட்டாளர்களிடையே 'விகிதசம' அடிப்படையில் ஒதுக்கப்படல் வேண்டும். இதன்படி, விலைக்குறிப்பீடுகள் வெட்டு வட்டி வீதத்தில் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

26.0 வியாபாரத்தினை மூடிவிடுதல் என்பது லங்கா செட்டில் முறைமை விதிகளின் பதிப்பு 2.1 இன் தொகுதி 4 அல்லது அதன் பிந்திய பதிப்பிலுள்ள நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணையிலுள்ள வியாபாரத்தினை மூடிவிடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட நேரம் எனக் கருதப்படல் வேண்டும். பொதுவாக, லங்கா செகுயரின் வியாபாரம் மூடப்படும் நேரம் 0430 மணியாகும். எனினும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் எதிர்பாராத நிகழ்வுகளைக் கையாள்வதற்காக காலத்திற்குக் காலம் அதன் ஏக தற்றுணிபின் அடிப்படையில் பின்பற்றப்படக்கூடிய தொழிற்பாட்டு அட்டவணைக்கு அவ்வப்பொழுது சீராக்கங்களைச் செய்யும். அத்தகைய சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி வியாபாரத்தினை மூடிவிடும் நேரத்தினை சீர்செய்து அவசியமானவிடத்து பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கும்.

27.0 பங்கேற்கும் நிறுவனங்கள் தீர்ப்பனவு தொடர்பான அறிவுறுத்தல்கள் எதனையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படவில்லை.

28.0 துணைநில் கடன்வழங்கல் வசதி, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் மற்றும் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் என்பன தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலீட்டுப் பிணையங்கள் அனுமதிக்கப்படமாட்டா.

29.0 பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவு கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்கள் பங்கேற்கும் நிறுவனங்களினால் வர்த்தகப்படுத்தப்படக்கூடாது

## பகுதி 3: துணைநில் வசதி

30.0 துணைநில் வசதி ஓரிரவு வசதியொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன் இதில், பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியிலுள்ள வைப்பு நிதியத்திற்கான துணைநில் வைப்பு வசதியினை பயன்படுத்த அல்லது தகைமையுடைய பிணையங்களை வழங்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியிலிருந்து நிதியினைக் கடன்படுவதற்கு துணைநில் கடன்வழங்கல் வசதியைப் பயன்படுத்த முடியும். துணைநில் வசதியின் கீழ் அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட அல்லது கடன்படப்பட்ட தொகை அவற்றின் சொந்த தற்றுணிபினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். சிறப்பு வைப்பு வசதி/ சிறப்புக் கடன்வழங்கல் வசதியின் கீழ் அதேநேர கணனிவி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக வைப்புச் செய்யப்பட்ட/ கோரப்பட்ட தொகையின் முழுப் பொறுப்பும் பங்கேற்கும் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். கோரப்பட்ட தொகைக்கு மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் எந்தவொரு சூழ்நிலையிலும் பங்கேற்கும் நிறுவனத்தினால் வைப்புச் செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டின் மீது திருத்தங்கள் எதனையும் செய்யமுடியாது.

### 3.1 துணைநில் வைப்பு வசதி

31.0 துணைநில் வைப்பு வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக சமர்ப்பிப்பதன் மூலம் இலத்திரனியல் ரீதியாக வணிகத்தினை 1530 மணிக்குப் பிந்தாமல் பதியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

32.0 துணைநில் வைப்பு வசதிக்கான ஏற்புடைத்தான வட்டி வீதம் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் "வட்டிக் கூறு" தொடர்பான வைப்பின் காலப்பகுதிக்காக கணிக்கப்படுதலும் வேண்டும்.

33.0 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் துணைநில் வைப்பு வசதியில் வைத்திருக்க விரும்பும் பெறுமதியினை பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அதேநாளன்று லங்காசெட்டில் முறைமை விதியின் நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக்கிணங்க பற்று வைக்கும்.

34.0 பங்கேற்கும் நிறுவனம், லங்காசெட்டில் முறைமையின் பங்கேற்பாளர் புறோசர் பணி நிலைத்தினூடாக தமது தீர்ப்பனவுக் கணக்கில் தொடர்பான பற்று இடம்பெற்றுள்ளதாக என்பதனை சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும்.

35.0 தொடர்பான கணக்கு வைத்திருப்பவருக்கு துணைநில் வைப்பு வசதியில் வைப்புச் செய்யப்பட்ட பெறுமதியளவிற்கு அவர்களது கணக்கில் செய்யப்பட்ட பற்றினை உறுதிப்படுத்தும் பற்று சுவிப்ற் செய்தி அதாவது பின் 900 இன் உறுதிப்படுத்தல் அனுப்பி வைக்கப்படும்.

36.0 முதிர்ச்சி நாளன்று, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், வட்டிக் கூறுடன் சேர்த்து ஆரம்ப வைப்புப் பெறுமதியினை 0830 மணிக்குப் பிந்தாமல் பங்கேற்பாளர் நிறுவனங்கள் கணக்கிற்கு பற்று வைக்கும்.

37.0 தொடர்பான கணக்கு வைத்திருப்பவருக்கு அவரது கணக்கிற்குச் செய்யப்பட்ட வைப்பினை உறுதிப்படுத்தும் வரவு சுவிப்ற் செய்தி அதாவது பின் 910இன் உறுதிப்படுத்தல் முதிர்ச்சி நாளன்று 0830 மணிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கப்படும்.

### 3.2 துணைநில் கடன்வழங்கல் வசதி

38.0 துணைநில் கடன்வழங்கல் வசதியானது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் கோட்பாடுகளின் மீது தொழிற்படுகிறது. துணைநில் கடன்வழங்கல் வசதியின் கீழ் இலங்கை மத்திய வங்கி, உடன்பாடு காணப்பட்ட திகதியன்று உடன்பாடு காணப்பட்ட விலையில் (மீள்கொள்வனவு விலை/ மீண்டும் விற்கும் விலை) மீண்டும் விற்கப்படும் என்ற உடன்படிக்கையொன்றுடன் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து உடன்பட்ட விலையில் (கொள்வனவு விலை) அரச பிணையங்களை (திறைசேரி உண்டியல்கள்/கள் மற்றும் அல்லது திறைசேரி முறி/கள்) கொள்வனவு செய்யும்.

39.0 மீண்டும் விற்கும் பெறுமதியானது தொடர்பான வணிகத்திற்கான கொள்வனவு விலையினையும் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

40.0 துணைநில் கடன்வழங்கல் வசதிக்கான ஏற்புடைத்தான வட்டி வீதம் இலங்கை மத்திய வங்கி துணைநில் கடன்வழங்கல் வசதியின் வீதமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் "வட்டிக் கூறு" தொடர்பான கடன்வழங்கல் காலப்பகுதிக்காக கணிக்கப்படுதல் வேண்டும்.

41.0 துணைநில் கடன்வழங்கல் வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் பிணையங்களின் தேவைப்படும் தொகையினையும் விபரங்களையும் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாகச்

சமர்ப்பிப்பதன் மூலம் வணிகத்தினை இலத்திரனியல் மூலம் 1530 மணிக்குப் பிந்தாமல் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

42.0 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கு எதிராக பிணையங்களின் (கோரப்பட்ட தொகை) கொள்வனவு விலைக்கான தொகையில் பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கிற்கு அதேநாளன்று 1615 மணிக்குப் பிந்தாமல் வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

43.0 ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம், முகப்புப் பெறுமதி, விளைவு வீதம் மற்றும் முதிர்ச்சித் திகதி என்பனவற்றை எடுத்துக்காட்டும் துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகத்தின் உறுதிப்படுத்தலானது அதேநாளன்று 1615 மணிக்குப் பிந்தாமல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

44.0 முதிர்ச்சித் திகதியன்று (மீண்டும் விற்கும் நாள்) இலங்கை மத்திய வங்கி, பிணையங்களினை மீளவிற்கும் பெறுமதிக்காக (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்குப் பெறப்படும் நிதியத்திற்கெதிராக 1100 மணிக்குப் பிந்தாமல் லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் சொந்தக் கணக்கிற்குக் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை மீண்டும் மாற்றல் செய்ய வேண்டும்.

## பகுதி 4: குறுங்கால ஏலங்கள்

45.0 குறுங்கால ஏலங்கள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் வடிவில் காணப்படும். குறுங்கால ஏலங்களின் காலம் ஓரிரவிலிருந்து ஒரு வாரம் வரையில் காணப்படும். சரியான காலமும் வழங்கப்பட்ட தொகையும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 5.0 இல் குறிப்பிடப்பட்டவாறு சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். தீர்ப்பனவானது அதேநாள் தீர்ப்பனவினை (ரி+0) அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

46.0 இலங்கை மத்திய வங்கி சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை அதேநாளன்று 0930 மணியளவில் அறிவித்தல் வேண்டும். அறிவித்தலானது, முன்வைக்கப்படவுள்ள ஏலங்களின் வகை (குறுங்கால மீள்கொள்வனவு அல்லது குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு), முன்வைக்கப்பட்ட தொகை மற்றும் முதிர்ச்சித் திகதி (காலம்) என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

47.0 ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் உயர்ந்தபட்சம் 3 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் மொத்தப் பெறுமதி தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் அவர்கள் முதலீடு செய்ய/ கடன்பட விரும்பும் தொகையினையும் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதத்தினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

48.0 குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் குறுங்கால திரவ ஆதரவு வசதி ஏலங்களின் பெறுபேறுகள், ஏலத் திகதியன்று ஏல வெட்டுநேரத்திற்கு 30 நிமிடங்களின், பின்னர் அதேநேரக் கணனி வழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பினூடாகப் பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதம், வெற்றிபெற்ற விலைக்குறிப்பீடுகளின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்கள் என்பனவற்றைக் கொண்ட விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஏலத்தின் ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலத்தின் பெறுபேறுகள்( நிராகரிக்கப்பட்டவை, ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகள்) அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படும்.

49.0 வெற்றிபெற்ற ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டிற்குமாக, குறுங்கால மீள்கொள்வனவில் இலங்கை மத்திய வங்கியின் அலுவல்சார் விற்பனை விலையில் பிணையங்கள் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் குறுங்கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் தொடர்பில் ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனத்திற்கான ஏலப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் உறுதிப்படுத்தல் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியலூடாக விடுவிக்கப்படும். உறுதிப்படுத்தல் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் மற்றும் ஒதுக்கப்பட்ட முகப்புப் பெறுமதி (விலைக்குறிப்பீடு பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமாயின் மீளக்கணிக்கப்பட்ட முகப்புப் பெறுமதிகள்) ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் மீள்கொள்வனவு/ விற்பனைப் பெறுமதி என்பனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

### 4.1 குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள்

50.0 குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களின் கீழ் முதலீடு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவிப்பினை தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியில் அவர்களது விலைக்குறிப்பீட்டினை/ விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தில் அல்லது அதற்கு அதிகமான வீதத்தில் அமைந்த எந்தவொரு விலைக்குறிப்பீடும் நிராகரிக்கப்படும்.

51.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

52.0 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு லங்காசெட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக மேற்கொள்ளப்படும். பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்காக இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கான நிதியங்களின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) பெறுகைகளுக்கெதிராக லங்கா செகுயரிலுள்ள தொடர்பான பங்கேற்கும் நிறுவனத்தின் வழங்கல் எதிர் கொடுப்பனவுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கொடுக்கல்வாங்கல்களை 1315 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ தீர்ப்பனவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

53.0 வெற்றி பெற்ற பங்கேற்கும் நிறுவனங்கள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், 1315 மணியளவில் பிணையங்களின் விற்பனைப் பெறுமதியினை (ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி) முழுமையாகப் பற்று வைப்பதனை இயலச்செய்யும் விதத்தில் தமது தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

54.0 முதிர்ச்சித் திகதியன்று (மீள்கொள்வனவுத் திகதி) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் சொந்தக் கணக்கிற்கு அல்லது உள்நாட்டுத் தொழிற்பாடுகள் கடன்பாட்டுக் கணக்கிற்கு விற்பனை செய்யப்பட்ட பிணையங்களுக்கெதிராக பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் மீள்கொள்வனவுப் பெறுமதியை வரவு வைக்கும்.

55.0 மீள்கொள்வனவுப் பெறுமதியானது பிணையங்களின் விற்பனை விலையையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் உடன்பாடு காணப்பட்ட காலப்பகுதிக்கான (காலம்) அவ்விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

56.0 பங்கேற்கும் நிறுவனங்கள், குறுங்கால மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் முழுமையாகத் திருப்பப்படுவதனை இயலச்செய்யும் விதத்தில் முதிர்ச்சித் திகதியன்று (மீள்கொள்வனவுத் திகதி) 0830 மணியளவில் லங்கா செகுயரிலுள்ள அவற்றின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### 4.2 குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

57.0 குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களிலிருந்து கடன்பட விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் அவற்றின் விலைக்குறிப்பீட்டினை/ விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் விலைக்குறிப்பீடுகளுடன் சேர்த்து பிணைய விபரங்கள் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கங்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. துணைநில் வைப்பு வசதி வீதத்தில் அல்லது அதற்குக் குறைவான வீதத்தில் அமைந்த எந்தவொரு விலைக்குறிப்பீடும் நிராகரிக்கப்படும்.

58.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

59.0 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, தீர்ப்பனவு நாளன்று 1315 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்காசெட்டிலில் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதிகளினூடாக செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்காசெட்டிலிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கிற்கான கொள்வனவுப் பிணையங்களின் பெறுகைக்கெதிராக, பிணையங்களின் கொள்வனவு பெறுமதிக்காக (ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

60.0 முதிர்ச்சித் திகதியன்று (மீண்டும் விற்பனை செய்யும் நாள்) இலங்கை மத்திய வங்கி, கொள்வனவு செய்யப்பட்ட பிணைய/ பிணையங்களின் மீண்டும் விற்பனை செய்யும் பெறுமதிக்காக (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதிகள் பெறப்பட்டதற்கெதிராக, 1100 மணிக்குப் பிந்தாமல் லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனத்தின் சொந்தப் பிணையக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை மீண்டும் மாற்றல் செய்யும்.

61.0 மீண்டும் விற்பனை செய்யும் பெறுமதியானது பிணையங்களின் கொள்வனவு விலைகளையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) மற்றும் தொடர்பான விலைக்குறிப்பீடுகளுக்கான வட்டிக் கூறு என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். தொடர்பான விலைக்குறிப்பீட்டில் வட்டிக் கூறானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் உடன்படிக்கை (காலப்பகுதி) காலப்பகுதிக்குரிய விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படும்.

## பகுதி 5: நீண்ட கால ஏலங்கள்

62.0 நீண்ட கால ஏலங்கள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் வடிவிலிருக்கும். நீண்ட கால ஏலங்களின் காலப்பகுதி 7 நாட்களுக்கும் கூடுதலாக (ஒரு வாரத்திற்கும் கூடுதலாக) இருக்கும்.

63.0 இலங்கை மத்திய வங்கி, நீண்ட கால ஏலங்களை நடத்துவதற்கான சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை ஏல நாளன்று 0930 மணியளவில் அல்லது ஏலத் திகதிக்கு ஒரு நாள் முன்கூட்டிய வியாபார நாளன்று அறிவிக்கும். அறிவித்தலானது முன்வைக்கப்படும் ஏலத்தின் வகை (நீண்ட கால மீள்கொள்வனவு அல்லது நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு, நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி), முன்வைக்கப்படும் தொகை, முதிர்ச்சி நாள் (காலம்), ஏலத்திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

64.0 ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் மொத்த விலைக்குறிப்பீட்டின்/ குறிப்பீடுகளின் பெறுமதி, தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்படும் தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் அவர்கள் முதலீடு செய்ய/ கடன்பட விரும்பும் தொகையினையும் தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டித் தொகையினையும் உள்ளடக்கியிருக்கும். நீண்ட கால மீள்கொள்வனவு, நீண்ட நேர்மாற்று மீள்கொள்வனவு, நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் நேர அட்டவணையின் இணைப்பு மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுச் சாதனங்களின் தொகுப்பின்படி நடத்தப்படுமென்பதுடன் தீர்ப்பனவுத் திகதி அடுத்துவரும் வியாபார நாளாக இருக்கும்.

65.0 குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்களின் பெறுபேறுகள் ஏலத் திகதியன்று ஏல வெட்டுநேரத்திற்கு 30 நிமிடங்களின பின்னர் அதேநேரக் கணனி வழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பூடாகப் பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதம் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீடுகளின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்கள் என்பனவற்றைக் கொண்ட விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஏலத்திற்கு ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலத்தின் பெறுபேறுகள்( நிராகரிக்கப்பட்டவை, ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகள்) அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படும்.

66.0 ஒவ்வொரு வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டிற்குமாக, குறுங்கால மீள்கொள்வனவில் இலங்கை மத்திய வங்கியின் அலுவல்சார் விற்பனை விலையில் பிணையங்கள் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் தொடர்பில் ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனத்திற்கான உறுதிப்படுத்தல் ஏலப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியலூடாக விடுவிக்கப்படும். உறுதிப்படுத்தல் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் மற்றும் ஒதுக்கப்பட்ட (விலைக்குறிப்பீடு பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமாயின் மீள கணிக்கப்பட்ட முகப்புப் பெறுமதிகள்) தொடர்பான முகப்புப் பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் மீள்கொள்வனவு/ விற்பனைப் பெறுமதி என்பனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்

## 5.1 நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள்

67.0 நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களில் முதலீடு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் ஏல நாளன்று அவற்றின் விலைக்குறிப்பீட்டினை/ குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

68.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

69.0 தீர்ப்பனவு நாளன்று, கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகள் லங்காசெட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக மேற்கொள்ளப்படும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான (கொள்வனவு விலை) நிதியங்களின் பெறுகைக்கெதிராக (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) லங்கா செகுயரிலுள்ள தொடர்பான பங்கேற்பு நிறுவனத்தின் வழங்கல் எதிர் கொடுப்பனவுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களை (கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) மாற்றல் செய்வதன் மூலம் தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்யும்.

70.0 வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்கள், தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணியளவில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பிணையங்களின் விற்பனைப் பெறுமதியினை (ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி) முழுமையாக பற்று வைப்பதனை இயலச்செய்யும் விதத்தில் அவர்களின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியம் கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

71.0 முதிர்ச்சி நாளன்று (மீள்கொள்வனவுத் திகதி), கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்காசெகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்த அல்லது உள்நாட்டுத் தொழிற்பாடுகள் கடன்பாட்டுக் கணக்கிற்கான விற்பனை செய்யப்பட்ட

பிணையங்களின் பெறுகைக்கெதிராக, 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் மீள்கொள்வனவுப் பெறுமதியை வரவு வைக்கும்.

72.0 மீள்கொள்வனவுப் பெறுமதியானது பிணையங்களின் விற்பனை விலையையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான விலைக்குறிப்பீடுகளுக்கான வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு, ஏற்றுக்கொள்ளப்படட தொகையினையும் உடன்படிக்கையின் காலப்பகுதிக்கான (காலம்) விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதத்தினையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும்.

### 5.2 நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

73.0 நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களிலிருந்து கடன்பட விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவித்தலினைத் தெரிவுசெய்வதன் மூலம் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியாக தமது விலைக்குறிப்பீட்டினை/ குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. பங்கேற்கும் நிறுவனங்கள் அவர்களின் விலைக்குறிப்பீட்டுடன் சேர்த்து பிணைய விபரங்களின் பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கத்தினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

74.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

75.0 தீர்ப்பனவு நாளன்று, கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு 0830 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பெறப்பட்டமைக்கு எதிராக பிணையங்களின் கொள்வனவு விலைக்காக (ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

76.0 முதிர்ச்சி நாளன்று (மீண்டும் விற்பனை செய்யும் நாள்) இலங்கை மத்திய வங்கி, கொள்வனவு செய்யப்பட்ட பிணையம்/ பிணையங்களின் மீண்டும் விற்கப்படும் பெறுமதிக்காக (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கான நிதிகளின் பெறுகைக்கு எதிராக 1100 மணிக்குப் பிந்தாமல் லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் சொந்தப் பிணையக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை மீண்டும் மாற்றல் செய்யும்.

77.0 மீண்டும் விற்கும் பெறுமதி பிணையங்களின் கொள்வனவு விலை (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) மற்றும் தொடர்பான விலைக்குறிப்பீட்டிற்கான வட்டிக் கூறு என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, உடன்படிக்கையின் காலப்பகுதிக்கான (காலம்) விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி 6: திரவத்தன்மை ஆதரவு வசதி

78.0 திரவத்தன்மை ஆதரவு வசதியானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் நீங்கலாக, முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட கம்பனிகளான தனியான முதனிலை வணிகர்களுக்காக நேர்மாற்று மீள்கொள்வனவு வடிவில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்றது. திரவத்தன்மை ஆதரவு வசதியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்படும் போது அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் போது தனியான முதனிலை வணிகர்களுக்கு கிடைக்கச் செய்யப்படும்.

79.0 திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் நிதியினைக் கடன்படுவதற்கு எண்ணுகின்ற தனியான முதனிலை வணிகர்கள், தொடர்பான ஏலத்தினை தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறைமையினூடாக அவர்களின் பிணைய விபரங்கள் மற்றும் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் என்பனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

80.0 அதே நாளன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக நடத்தப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தின் உயர்ந்தபட்சம் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீட்டு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ் ஏலங்களின் தள வீதம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும். பிரயோகிக்கத்தக்க தள வீதம் திரவத்தன்மை ஆதரவு வசதிக்கான ஏலம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு மற்றும் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக அறிவிக்கப்படல் வேண்டும். தள வீதத்திற்குக் குறைவான எந்தவொரு விலைக்குறிப்பீடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

81.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

82.0 திரவத்தன்மை ஆதரவு வசதிக்காகப் பதிலீட்டுப் பிணையங்களைச் சமர்ப்பிப்பது அனுமதிக்கப்படமாட்டாது.

83.0 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு அதேநாளன்று 1315 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ செய்முறைப்படுத்தப்படல்

வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்காசெகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவு கணக்கிற்குள் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பெறப்படுவதற்கெதிராக பிணையங்களின் கொள்வனவு விலைகளுக்காக (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான தனியான முதனிலை வணிகர் தீர்ப்பனவுக் கணக்கிற்காக வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

84.0 முதிர்ச்சித் திகதியன்று (தொடர்பான தனியான முதனிலை வணிகர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட திகதி) இலங்கை மத்திய வங்கி, லங்காசெகுயரிலுள்ள தொடர்பான தனியான முதனிலை வணிகர்கள் சொந்த பிணையக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை 11.00 மணிக்குப் பிந்தாமல் தனியான முதனிலை வணிகரின் பிணை/ பிணையங்களின் மீள்கொள்வனவு பெறுமதிக்கான இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதி கிடைக்கப் பெற்றமைக்கெதிராக மீண்டும் மாற்றல் செய்தல் வேண்டும்.

85.0 மீள்கொள்வனவுப் பெறுமதி பிணையங்களின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) கொள்வனவுப் பெறுமதி மற்றும் தொடர்பான விலைக்குறிப்பீட்டிற்கான வட்டிக் கூறு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு, ஏற்றக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் உடன்படிக்கையின் காலப்பகுதிக்கான விலைக்குறிப்பீட்டிற்காக (காலம்) தனியான முதனிலை வணிகர்கள் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதத்தின் அடிப்படையில் கணிக்கப்படல் வேண்டும்.

## பகுதி 7: உடனடி ஏலங்கள்

86.0 இலங்கை மத்திய வங்கி, அதன் உடமையிலிருந்து திறைசேரி உண்டியல்களை அல்லது முறிகளை (நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு) அல்லது இரண்டாந்தரச் சந்தையிலிருந்து அவற்றைக் கொள்வனவு செய்வதற்குத் (நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்கு) தீர்மானிக்கலாம். அனைத்துப் பங்கேற்பாளர்களும் உடனடி ஏலங்களை அணுகலாம்.

87.0 இலங்கை மத்திய வங்கி ஏல நாளன்று அல்லது ஏல நாளுக்கு முன்னதாக ஒரு வியாபார நாளன்று 0930 மணியளவில் உடனடி ஏலத்தினை நடத்துவதற்கான சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை அறிவிக்கும் அதேவேளை, திறைசேரி முறிகளுக்கான உடனடி ஏலமொன்றினை நடத்துவதற்கான தீர்மானம் ஏல நாளுக்கு குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு முன்னதாக அறிவிக்கப்படும். அறிவித்தலானது முன்வைக்கப்படும் ஏலத்தின் வகை (உடனடி விற்பனை அல்லது கொள்வனவு), முன்வைக்கப்பட்ட தொகை (பிணையங்கள் முகப்புப் பெறுமதி), முதிர்ச்சித் திகதி, முதிர்ச்சிக்கு இன்னமுமுள்ள நாட்கள், ஏலத் திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உடனடிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவுத் திகதி அடுத்துவரும் வியாபார நாளாக இருக்கும்.

88.0 ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன் இவை இணைப்பில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தின்படி ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் மொத்த விலைக்குறிப்பீடுகளின் பெறுமதி, தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் அவர்கள் வாங்க/ விற்க விரும்பும் பிணையங்களின் முகப்புப் பெறுமதியினையும் கொள்வனவு செய்யப்பட்ட/ விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் தேவைப்படுத்தப்பட்ட முதிர்ச்சிக் காலம், திறைசேரி முறிகளின் கொள்வனவினைப் பொறுத்தவரையில் நறுக்கு வீதம் மற்றும் நறுக்குத் திகதி, தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் (விளைவு வீதம்) மற்றும் எதிர்பார்க்கப்படும் விலை என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

89.0 உடனடி/ கொள்வனவு ஏலங்களின் பெறுபேறுகள் ஏல வெட்டுநேரத்திலிருந்து மூன்று மணித்தியாலங்களுக்குள் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாகப் பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதம் என்பனவற்றின் விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலத்தின் பெறுபேறுகள் (நிராகரிக்கப்பட்டவை, ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகள்) ஏற்புடைத்தானவிடத்து பிணையங்களின் ஏற்புடைத்தான விற்பனைகளுடன் சேர்த்து ஏலத்திகதியன்று அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக அறிவிக்கப்படும்.

### 7.1 உடனடி விற்பனை ஏலங்கள்

90.0 உடனடி விற்பனை ஏலங்களிலிருந்து திறைசேரி உண்டியல்கள்/ முறிகளைக் கொள்வனவு செய்ய விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவித்தலைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக ஏல நாளன்று அவற்றின் விலைக்குறிப்பீடு/ குறிப்பீடுகளை இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

91.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

92.0 தீர்ப்பனவுத் திகதியன்று, கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் (விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின்

கழிவிடப்பட்ட பெறுமதி) விற்பனைப் பெறுமதிக்கான நிதிகளின் பெறுகைக்கெதிராக லங்கா செகுயரிலுள்ள வெற்றி பெற்ற தொடர்பான விலைக்குறிப்பீட்டாளரின் (பங்கேற்கும் நிறுவனம்) சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

93.0 விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதியானது விடயத்தைப் பொறுத்து தொடர்பான விலைக்குறிப்பீட்டாளரால் (பங்கேற்கும் நிறுவனம்) விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் (விளைவு வீதம்) மற்றும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் முதிர்ச்சித் திகதி என்பவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.

**7.2 உடனடி கொள்வனவு ஏலங்கள்**

94.0 உடனடிக் கொள்வனவு ஏலங்களில் மத்திய வங்கியினால் எடுத்துக்காட்டப்பட்ட (முன்வைக்கப்பட்ட) முதிர்ச்சியில் திறைசேரி உண்டியல்/ முறிகளினை விற்பனை செய்ய விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று ஏல நாளன்று அவற்றின் விலைக்குறிப்பீடு/ விலைக்குறிப்பீடுகளைப் பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவு செய்வதன் மூலம் இலத்திரனியல் ரீதியாக அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

95.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

96.0 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக பின்னூட்டல் வசதியினூடாக செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கெதிராக, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதிக்காக (கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்கிறது.

97.0 பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதியானது விடயத்தைப் பொறுத்து தொடர்பான விலைக்குறிப்பீட்டாளரால் (பங்கேற்கும் நிறுவனம்) விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் (விளைவு வீதம்) மற்றும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் முதிர்ச்சித் திகதி என்பவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.

## பகுதி 8: மத்திய வங்கிப் பிணையங்கள்

98.0 இலங்கை மத்திய வங்கி, மிகையான ரூபாத் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 91 (1)(ஆ) இன் கீழ், தேவையெனக் கருதும் பொழுது மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கும் அத்துடன்/ அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட மத்திய வங்கி பிணையங்களை நேரகாலத்துடன் இளைப்பாற விடுவதற்கும் அது தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

99.0 இலங்கை மத்திய வங்கி

i. ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்

ii. ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாறவிடுதல்

iii. இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மீள்விற்பனை வசதி

என்பன தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளமுடியும்.

100.0 இப்பிணையங்களின் முக்கிய பண்புகள் வருமாறு:

i. இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்கப்படும்.

ii. இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் கைமாறத்தக்கவை.

iii. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமை என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான நியதிகளும் ஒழுங்குவிதிகளும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மாற்றல்கள் மற்றும் தீர்ப்பனவுகளுக்கும் ஏற்புடைத்தாக இருக்கும்.

iv. இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் சந்தைப்படுத்தத்தக்கனவாகும். எனினும், இப்பிணையங்கள் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி, துணைநில் கடன் வழங்கல் வசதி, அல்லது மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு பிணையமாகப் பயன்படுத்தத் தகைமையற்றனவாகும்.

v. அரச திறைசேரி உண்டியல்களைப் போன்று இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களும் கழிவிடல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

vi. பங்கேற்கும் நிறுவனங்கள் இப்பிணையங்களை இலங்கை மத்திய வங்கியிலிருந்து கொள்வனவு செய்ய உரித்துடையனவாகும். பொதுமக்கள் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வர்த்தக வங்கிகளூடாக அல்லது முதனிலை வணிகர்களினூடாக இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய முடியும்.

vii. அரச பிணையங்களைப் போன்று, இப்பிணையங்களின் ஆரம்ப வழங்கல் வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரிக்கு ஏற்புடைத்தானதாகும்.

viii. இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களினது காலம் (முதிர்ச்சிக் காலம்) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும்.

### 8.1 ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்

### (குறுங்காலம் மற்றும் நீண்ட காலம்)

101.0 ஏல நாளன்று அல்லது ஏல நாளுக்கு முன்னதாகவுள்ள ஒரு வியாபார நாளன்று இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு ஒரு ஏலத்தினை நடத்துவதற்கான நாணயத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை இலங்கை மத்திய வங்கி அறிவிக்கும். ஏலம் தொடர்பான அறிவித்தலானது ஏலத்தின் வகை (குறுங்காலம் அல்லது நீண்ட காலம்), முன்வைக்கப்பட்ட தொகை (முகப்புப் பெறுமதி), விற்கப்படவுள்ள பிணையங்களின் முதிர்ச்சிக் காலம், ஏலத்தின் திகதி மற்றும் நேரம் மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

102.0 இலங்கை மத்திய வங்கி ஒன்றில் குறுங்கால அல்லது நீண்ட கால மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்க முடியும். குறுங்கால மத்திய வங்கிப் பிணையங்கள் 1 நாளிலிருந்து 7 நாட்கள் (1 வாரம்) வரையில் காணப்படுகின்ற வேளையில் நீண்ட காலப் பிணையங்கள் 7 நாட்களுக்கும் கூடுதலான (ஒரு வாரத்திற்கும் கூடுதலான) காலப்பகுதிக்கு வழங்கப்படும்.

103.0 ஏலமானது உடனடி விற்பனை ஏலத்திற்கான விருப்பின் கீழ் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக நடத்தப்படும். ஏலங்களிலிருந்து இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று தொகை (கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) மற்றும் ஏல அறிவிப்பில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் காலப்பகுதியில் ஏலத் திகதியிலுள்ள விலைக்குறிப்பீட்டின் வட்டி (விளைவு) வீதம் என்பனவற்றைப் பொருத்தமான விற்பனை ஏல அறிவிப்பினைத் தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக, இலத்திரனியல் முறைமையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

104.0 ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் ஒவ்வொரு முதிர்ச்சிக்குமாக உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் மொத்த விலைக்குறிப்பீட்டின்/ விலைக்குறிப்பீடுகளின் பெறுமதி தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

105.0 பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி (விளைவு) வீதங்கள் பிடித்துவைத்தல் வரியுடன் கூடிய விளைவு வீதங்களாக இருக்கும்.

106.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

107.0 ஏலங்களின் பெறுபேறானது பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் என்பனவற்றை வழங்கும் விதத்தில் ஏலம் மூடப்பட்டத்திலிருந்து 30 நிமிடங்களின் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏல நாளன்று ஏலம் மூடப்பட்டதிலிருந்து 30 நிமிடங்களுக்குப் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக பிணையங்களின் தொடர்பான விற்பனை விலை (பிடித்துவைத்தல் வரி உட்பட) யுடன் சேர்த்து ஏலத்தின் பெறுபேறுகளை (விலைக்குறிப்பீடுகளின் நிராகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளல் பற்றி) அறிவிக்கப்படும்.

108.0 ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டினதும் விற்பனை விலை (பிடித்துவைத்தல் வரி உட்பட) தொடர்பான பங்கேற்கும் நிறுவனத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட பிணையங்களின் முதிர்ச்சிக் காலத்திற்கான பிடித்துவைத்தல் வரிக்கு (வரி வீதத்திற்குப் பின்னர்) சீராக்கப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி (விளைவு) வீதங்களில் பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவிடுவதன் மூலம் கணிக்கப்படுதல் வேண்டும்.

109.0 ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம், முகப்புப் பெறுமதி மற்றும் முதிர்ச்சித் திகதி என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்குள் வணிகத்தின் உறுதிப்படுத்தலொன்று அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக இலத்திரனியல் ரீதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் பங்கேற்கும் நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

110.0 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக மேற்கொள்ளுதல் வேண்டும். தீர்ப்பனவு நாளன்று, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான (விற்கப்பட்ட பிணையங்களின்

கழிவிடப்பட்ட பெறுமதி/ பிடித்துவைத்தல் வரியுடனான விலை) நிதியங்களின் பெறுகைக்கெதிராக லங்கா செகுயரிலுள்ள தொடர்பான பங்கேற்கும் நிறுவனத்தின் சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினை மாற்றல் செய்வதன் மூலம் கீழே 110 கிளைவாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட தொடர்பான தீர்ப்பனவு நேரத்தில் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

111.0 தீர்ப்பனவு நேரம் பின்வருமாறு இருக்கும்:

i. குறுங்கால இலங்கை மத்திய வங்கி பிணைய ஏலங்களுக்கான, தீர்ப்பனவானது ஏல நாளன்று தொடர்பான ஏலம் மூடப்பட்டதன் பின்னர் 2 மணித்தியாலங்களுக்கிடையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ii. நீண்ட கால இலங்கை மத்திய வங்கிப் பிணைய ஏலங்களுக்கான, தீர்ப்பனவு நேரமானது தொடர்பான தீர்ப்பனவு நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

112.0 பிணையங்களை இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கும் முதிர்ச்சிப் பெறுகைகளை (பிணையங்களின் முகப்புப் பெறுமதி) முதிர்ச்சித் திகதிக்கு உடனடியாக முற்போந்த வியாபார நாளன்று தொடர்பான பிணையங்களை வைத்திருக்கும் பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிற்கும் மாற்றல் செய்வதன் மூலம் முதிர்ச்சித் திகதியில் 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ முறைமையானது முதிர்ச்சித் தீர்ப்பனவுகளைத் தானாகவே ஆரம்பிக்கிறது.

**8.2 முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்**

113.0 இலங்கை மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விளைவு வீதத்தில் பங்கேற்கும் நிறுவனத்திற்கு வழங்கும்.

114.0 முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முதிர்ச்சிக் காலம், விளைவு வீதம் (பிடித்துவைத்தல் வரியுடன்) மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பன சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்குமென்பதுடன் அதேநேரக் கணினிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை/ பணச் சந்தைக் கண்காணிப்பு முறைமை அல்லது/ அத்துடன் வேறு ஏதேனும் தொடர்பூட்டல் முறைமைகள் என்பனவற்றினூடாக பங்கேற்கும் நிறுவனங்கள் ஒவ்வொரு வியாபார நாளன்றும் 1100 மணியிலிருந்து 1430 மணி வரையில் மத்திய வங்கிப் பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவுடனான வர்த்தகத்தினை மேற்கொள்ளவும் அழைக்கப்படுகின்றன.

115.0 முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் தொலைபேசி அல்லது தொலைநகல் செய்தி மூலம் அதே நாளன்று 1430 மணிக்குப் பிந்தாமல் கொள்வனவு செய்யத் தேவைப்படும் தொகையினை முகப்புப் பெறுமதி உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

116.0 பங்கேற்கும் நிறுவனங்கள் கொள்வனவு செய்வதற்குத் தேவைப்படும் தொகையினை (முகப்புப் பெறுமதி) இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமைக்கு (துணைநில் வசதி, உடனடிக் கொள்வனவுத் தேர்வின் கீழ்) அதேநாளன்று 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

117.0 யாருடைய வணிகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ அந்த பங்கேற்கும் நிறுவனங்கள் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக (துணைநில் வசதி உடனடி விற்பனைத் தேர்வின் கீழ்) அதேநாளன்று 1500 மணியளவில் அத்தகைய ஏற்றுக்கொள்ளல்களைப் பார்வையிட முடியும்.

118.0 வணிகத் திகதியன்று தீர்ப்பனவுகள் இடம்பெறுகின்ற விடயங்களைப் பொறுத்தவரையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் கோவை வணிகத் திகதியன்று 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செக்குயருக்கு சமர்ப்பிக்கப்படும். தீர்ப்பனவுத் திகதி அடுத்த நாளாக இருக்குமிடத்து பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூடல் கோவை தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செகுயருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

119.0 விற்கப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதிக்காக இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதிகள் பெறப்பட்டமைக்கெதிராக பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான சொந்தக் கணக்குகளுக்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் முறைமையானது கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

120.0 பிணையத்தின் முதிர்ச்சிக் காலப்பகுதிக்கான பிடித்துவைத்தல் வரிக்காக (வரி வீதத்திற்குப் பின்னர்) ஏற்புடைத்தான வட்டி வீதம் சீராக்கப்படுவதன் மூலம் விற்கப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவிடுவதன் மூலம் விற்பனைப் பெறுமதி (பிடித்துவைத்தல் வரியை உள்ளடக்கிய விற்பனை விலை) கணிக்கப்படும்.

121.0 முதிர்ச்சி நாளன்று, முறைமையானது பிணையங்களை இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கும் முதிர்ச்சிப் பெறுகைகளை முதிர்ச்சி நாளுக்கு முன்னைய வியாபார நாளன்று தொடர்பான பிணையங்களை வைத்திருக்கும் பங்கேற்கும் நிறுவனங்களின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கிற்கும் மாற்றல் செய்வதன் மூலமும் தன்னியக்கமாகவே தீர்ப்பனவினை மேற்கொள்ளும்.

122.0 இலங்கை மத்திய வங்கி அவசியமானது எனக் கருதும் பொழுது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் விளைவு வீதத்தினையும் முதிர்ச்சிக் காலத்தினையும் மாற்றுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், அத்தகைய மாற்றங்கள் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு, அதேநேரக் கணனி வழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை/ பணம் சந்தைக் கண்காணிப்பு முறைமை அல்லது வேறு ஏதேனும் தொடர்பூட்டல் முறைமையினைப் பயன்படுத்தி, இது நடைமுறைக்குவரும் நாளன்று 0930 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ அறியத்தரப்படும்.

**8.3 ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் உரிய காலத்திற்கு முன்னரான இணைப்பாற்றல்**

123.0 ஏலமொன்றினூடாக தொடர்பான முதிர்ச்சித் திகதி/ திகதிகளுக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாற்றுவதற்கு எப்பொழுது அவசியமானது என எண்ணுகிறதோ அப்பொழுது சந்தைத் தொழிற்பாட்டுக் குழு அதனைத் தீர்மானிக்கும்.

124.0 இலங்கை மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முதிர்ச்சித் திகதிக்கு முன்னதாகவே இளைப்பாற்றுவதற்கு (கொள்வனவு) ஏலமொன்றை நடத்துவதற்கு சந்தைத் தொழிற்பாட்டுக் குழு தீர்மானித்திருப்பது பற்றி ஏல நாளன்றோ அல்லது ஏலத் திகதிக்கு ஒரு வியாபார நாள் முன்னதாகவோ அறிவித்தல் வேண்டும். ஏலம் தொடர்பான அறிவித்தலானது முன்வைக்கப்பட்ட தொகை (முகப்புப் பெறுமதி), முதிர்ச்சித் திகதி (திகதிகள்) மற்றும் கொள்வனவு செய்யப்படவுள்ள பிணையங்களின் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம், ஏலம் நடைபெறும் திகதி மற்றும் நேரம் மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

125.0 ஏலத்தில் தொடர்பான மத்திய வங்கிப் பிணையங்களை விற்க விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று தொகை (விற்பனை செய்ய எதிர்பார்க்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) மற்றும் ஏல நாளன்று விலைக்குறிப்பீடு செய்யப்படவுள்ள வட்டி (விளைவு) வீதம் என்பன பற்றிய விபரங்களை, 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையில் உடனடிக் கொள்வனவு ஏலத் தேர்வின் கீழ் பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. தீர்ப்பனவு நேரம் அடுத்த வியாபார நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவே மேற்கொள்ளப்படும்.

126.0 ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் ஒவ்வொரு முதிர்ச்சிக்குமாக (பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம்) உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன் மொத்த விலைக்குறிப்பீட்டுப் பெறுமதி, தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

127.0 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

128.0 ஏலங்களின் பெறுபேறுகள் ஏலம் மூடப்பட்ட பின்னர் 30 நிமிடங்களின் பின்னர் அதேநேரக் கணினிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் ஆகிய விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலங்களின் பெறுபேறு (விலைக்குறிப்பீட்டின் நிராகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது பகுதியளவான ஏற்றுக்கொள்ளல்) மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் தொடர்பான கொள்வனவு விலைகள் போன்ற விபரங்கள் ஏல நாளன்று ஏலம் மூடப்பட்டு 30 நிமிடங்களின் பின்னர் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படும்.

129.0 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, தீர்ப்பனவு நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதிகளினூடாக செயன்முறைப்படுத்தப்படும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கான இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் பெறுகைக்கெதிராக, பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதிக்காக (கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

130.0 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் கொள்வனவு விலையானது, பிணையங்களின் முதிர்ச்சிக்கு இன்னமும் எஞ்சியுள்ள நாட்களுக்காக தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களினால் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டின் பெறுமதியையும் (கொள்வனவு செய்யப்படவிருக்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) கழிவிடுவதன் மூலம் கணிக்கப்படுகின்றது.

**8.4 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மீண்டும் விற்கும் வசதி மற்றும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் முன்கூட்டியே இளைப்பாற்றுதல்**

131.0 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் தொடர்பில், இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனங்களுக்காகப் பின்வரும் வசதிகளை வழங்குகின்றது:

அ. அவர்கள் வசமுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முதிர்ச்சிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கி

துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தில் மீண்டும் விற்பனை செய்வதற்கு.

ஆ. இலங்கை மத்திய வங்கி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதமொன்றில் முதிர்ச்சிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாற (கொள்வனவு) விடுவதற்கு.

132.0 131(அ) இன்படி, முதிர்ச்சியின் எஞ்சிய காலப்பகுதிக்காக இலங்கை மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் ஒப்பிடுகையில் கழிவிடல் வட்டி வீதமொன்றில் திரவத்தன்மைத் தேவைகளைப் பங்கேற்கும் நிறுவனங்கள் கொண்டிருக்கும் பொழுது, தொடர்பான மத்திய வங்கிப் பிணையங்களின் முதிர்ச்சித் திகதிக்கு முன்னதாக அவர்கள் வசமுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இலங்கை மத்திய வங்கிக்கு மீண்டும் விற்பனை செய்ய பங்கேற்கும் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன. 131(ஆ) இனைப் பொறுத்தவரை, இலங்கை மத்திய வங்கி முதிர்ச்சிக்கு முன்னர் இளைப்பாற விடப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் வீதம், முதிர்ச்சித் திகதி மற்றும் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் ஆகிய விபரங்களுடன் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாறவிடும் அதன் எண்ணத்தினை அறிவிக்கும்.

133.0 மேற்குறிப்பிட்ட வசதிகளை பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு மீண்டும் விற்க எதிர்பார்க்கப்படும் தொகையினை (இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) 1515 மணிக்குப் பிந்தாமல் தொலைபேசி அல்லது தொலைநகல் மூலம் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

134.0 பங்கேற்கும் நிறுவனங்கள் அதே நாளன்று 1515 மணிக்குப் பிந்தாமல் துணைநில் வசதியின் கீழ், உடனடிக் கொள்வனவுத் தேர்வினைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அதே விடயங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் இலத்திரனியல் ரீதியாக வணிகத்தினை (விற்பதற்குத் தேவைப்படும் தொகை மற்றும் பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கம்) உறுதிப்படுத்தல் வேண்டும். இத்தீர்ப்பனவானது அதேநாள் (ரி+0) தீர்ப்பனவு அடிப்படையில் இருக்கும்.

135.0 ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கம், முகப்புப் பெறுமதிகள் மற்றும் விளைவு வீதம் என்பனவற்றை உறுதிப்படுத்தி, அதேநாளன்று 1615 மணிக்குப் பிந்தாமல் அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியாக பங்கேற்கும் நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் வணிகத்தின் உறுதிப்படுத்தலொன்றினை வழங்கும்.

136.0 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதி (கொள்வனவு விலை) 131(அ) இன் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வீதத்தில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவிடுவதன் மூலமும் 131(ஆ) இனைப் பொறுத்தவரை பிணையங்களின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள நாட்களுக்கான முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்திலும் கணிக்கப்படுதல் வேண்டும்.

137.0 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக பின்னூட்டல் வசதியினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கெதிராக பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதிக்காக (கொள்வனவு செய்யப்பட்ட மத்திய வங்கிப் பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் அதேநாளன்று 1615 மணிக்கோ அல்லது அதற்கு முன்பதாகவோ கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

## பகுதி 9: வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பரப் பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள்

138.0 இப்பிரிவிலுள்ள நடைமுறைகள், வழிகாட்டல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மாத்திரமே ஏற்புடைத்தாகும்.

139.0 இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு, ஒன்றில் சந்தையிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக அல்லது சந்தைக்கு திரவத்தன்மையினை அல்லது உள்ளீடு செய்வதற்கான நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளிலுள்ள கருவியொன்றாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை நடத்துவது பற்றி தீர்மானிக்கும். வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள், இணங்கப்பட்ட வீதமொன்றில் எதிர்காலத் திகதியில் கொடுக்கல்வாங்கல்களை மாற்றியமைப்பதற்கான உடன்படிக்கையொன்றுடன் ஆரம்பத் திகதியொன்றில் ஒரு நாணயத்தினை மற்றொரு நாணயத்திற்கெதிராகக் கொள்வனவு செய்வதுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. கொடுக்கல்வாங்கல்களின் தன்மையினைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள் மீள்கொள்வனவினை ஒத்ததாக இருப்பினும் பிணையமென்ற முறையில் அரச பிணையங்களுக்குப் பதிலாக வெளிநாட்டு நாணயம் இருந்து வருகின்றது.

140.0 அனைத்து வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்களின் இரண்டு வகைகளில் ஈடுபடும்.

i. விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்; மற்றும்

ii. வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்

141.0 விற்றல் - வாங்கல் மற்றும் வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள் இப்பிரிவில் மேலோட்டமாகக் குறிப்பிடப்படுகின்றன.

142.0 விற்றல் - வாங்கல் மற்றும் வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான காலம் உயர்ந்தபட்சம் 365 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

143.0 இலங்கை மத்திய வங்கி, ஏல நாளன்று அல்லது ஏலத் திகதிக்கு ஒரு நாள் முன்னதாகவுள்ள ஒரு வியாபார நாளன்று 0930 மணியளவில் விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றலை நடத்துவதற்கான சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை அறிவிக்கும். அறிவித்தலானது முன்வைக்கப்பட்ட தொகை, ஏலத் திகதி, காலம் மற்றும் 1ஆவது பிரிவின் தீர்ப்பனவுத் திகதி மற்றும் இரண்டாவது பிரிவின் முதிர்ச்சித் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

144.0 இலங்கை மத்திய வங்கியுடனான வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையில் நுழைய விரும்பும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று ஏல நாளில் அதன் விலைக்குறிப்பீடுகளைப் பொருத்தமான ஏல அறிவித்தலைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

145.0 வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலமானது ஏல நாளன்று 1300 மணியிலிருந்து - 1400 மணி வரையான காலப்பகுதியில் விலைக்குறிப்பீடுகளுக்காக திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

146.0 விலைக்குறிப்பீடுகள் மறுஅறிவித்தல் வரை ஐ.அ.டொலரிலேயே ஏற்றுக்கொள்ளப்படும்.

147.0 வர்த்தக வங்கியொன்று ஒவ்வொரு விலைக்கோரலுக்கும் உயர்ந்தபட்சம் ஆறு விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்க முடியும். விலைக்குறிப்பீட்டின் குறைந்தபட்சப் பெறுமதி ஐ.அ.டொலர் ஒரு மில்லியனாகவும் ($ 1,000,000.00) விலைக்குறிப்பீடுகள் ஐ.அ.டொலர் நூறாயிரத்தின் ($ 100,000) பெருக்கமாகவும் இருக்கும். ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் ஐ.அ.டொலரிலான தொகையினையும் பரஸ்பர பரிமாற்றல் புள்ளியையும் (மாறுபட்ட வீத விலைக்கோருநர்கள்) கொண்டிருக்கும்.

148.0 பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகள் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையில் ரூபா நியதிகளில் இரண்டு தசமதானங்களில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். உ-ம் 0.20 = இருபது சதம்

149.0 ஒதுக்கீடுகள், வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

150.0 முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சும் விதத்தில் வெட்டு பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகளில் விலைக்குறிப்பீடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள் கிடைக்கத்தக்க அளவு “விகிதசம” அடிப்படையில் அத்தகைய விலைக்குறிப்பீட்டாளர்களிடையே ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். இதன்படி, வெட்டு பரஸ்பர பரிமாற்றல் புள்ளியில் விலைக்குறிப்பீடுகள் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

151.0 வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்களின் பெறுபேறுகள் ஏல நாளன்று ஏலம் மூடப்பட்டதிலிருந்து 30 நிமிடங்களின் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகள் என்பன அறிவிக்கப்படுகின்றன.

152.0 ஏல நாளன்று ஏலம் முடிவடைந்ததிலிருந்து 30 நிடங்களுக்குப் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றலினால் ஒதுக்கப்பட்ட பெறுமதியுடன் சேர்த்து ஏலங்களின் பெறுபேறுகள் (நிராகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது விலைக்குறிப்பீடுகளைப் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளல்) என்பனவற்றுடன் ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் அறிவிக்கப்படும்.

153.0 வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களின் உறுதிப்படுத்தல் ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, காலம், முதிர்ச்சித் திகதி மற்றும் பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகள் என்பனவற்றை உறுதிப்படுத்தி வழங்கப்படும்.

154.0 இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தொடர்பான விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை பௌதீக வடிவத்தில் மேற்கொள்ளும் என்பதுடன் ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளருக்கும் வணிக உறுதிப்படுத்தல்களை அனுப்பும்.

155.0 விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவு நடைமுறை மற்றைய இதேபோன்ற வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை ஒத்ததாகவே இருக்கும்.

**இணைப்பு**

## திறந்த சந்தைத் தொழிற்பாட்டு சாதனங்களின் நேர அட்டவணையும் தொகுப்பும்

| விபரங்கள் | சாதனம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறுங்கால மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் | குறுங்கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் | நீண்டகால மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் | உடனடி விற்பனைகள்/ கொள்வனவு ஏலங்கள் | நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் | வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் | துணைநில் வசதி | மத்திய வங்கிப் பிணையங்கள் |
| ஏல நேரம் | 1000 - 1030 மணித்தியாலங்கள் | 1100 - 1130 மணித்தியாலங்கள் | 1300 - 1330 மணித்தியாலங்கள் | 1300 - 1400 மணித்தியாலங்கள் | 1400 - 1430 மணித்தியாலங்கள் | 1300 - 1400 மணித்தியாலங்கள் | வெட்டுநேரம் 1530 மணித்தியாலங்கள் | வழங்கல் 1100 - 1130 மணித்தியாலங்கள் இளைப்பாறல் 1300 - 1400 மணித்தியாலங்கள் |
| அதேநேர இலத்திரனியல் விற்பனை முறைமையூடான தீர்ப்பனவு | T+0 | T+0 | T+1 | T+1 | T+1 | T+2 | T+0 | 1500 மணியளவில் |
| தீர்ப்பனவு நேரம் | 1315 மணியளவில் | 1315 மணியளவில் | T+1 0830 மணியளவில் | T+1 0830 மணியளவில் | T+1 0830 மணியளவில் | T+2 | துணைநில் வைப்பு வசதி - 1600 மணியளவில் துணைநில் கடன்வழங்கல் வசதி 1615 மணியளவில் (வழமையாக 1545 மணியளவில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது) | 0830 மணியளவில் மீளவிற்கும் வசதி T+0 1615 மணியளவில் இளைப்பாறல் - T+1 0830 மணியளவில் |
| முதிர்ச்சித் திகதி மீதான மாற்றல் | மீள்கொள்வனவு - 0800 மணியளவில் நேர்மாற்று மீள்கொள்வனவு - 1100 மணியளவில் | 1100 மணியளவில் | மீள்கொள்வனவு - 0800 மணியளவில் நேர்மாற்று மீள்கொள்வனவு - 1100 மணியளவில் | வி.கி. | 1100 மணியளவில் | வியாபாரத்தினை மூடிவிடல் | துணைநில் வைப்பு வசதி - 0800 மணியளவில் துணைநில் கடன்வழங்கல் வசதி - 1100 மணியளவில் | 0830 மணியளவில் |
| இணைத்தரப்பு | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் ஊ.சே. நிதியம் | தனியான முதனிலை வணிகர்கள் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் ஊ.சே. நிதியம் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊ.சே. நிதியம் | தனியான முதனிலை வணிகர்கள் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊ.சே.நிதியம் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊ.சே.நிதியம் |
| காலம் | 1 - 7 நாட்கள் | 1 - 7 நாட்கள் | 7 நாட்களுக்கும் கூடுதலாக | வி.கி. | 7 நாட்களுக்கும் கூடுதலாக | 1 ஆண்டு வரை | ஓரிரவு | 1 ஆண்டு வரை |